தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்


ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 10
பிப்ரவரி 2024

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

## சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் மகத்தான சாதனைகள் படைத்து வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சீர்மிகு செயல்பாடுகள்



















மகளிர் தின வாழ்த்துகள்



முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

உங்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி, இவ்வையம் தழைக்குமாம்” என்ற மகாகவி பாரதியின் கனவினை இன்று சுய உதவிக் குழு மகளிர் நினைவாக்கி வருகின்றனர். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னரே ஆண்களுக்கு நிகரான உரிமை, வேலைக்கேற்ற ஊதியம், எட்டுமணி நேர வேலை, வாக்குரிமை, அடிமைகளாக நடத்துவதிலிருந்து விடுதலை போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி பெண்கள் நடத்திய போராட்டங்களுக்கு வெற்றி கிடைத்த நாளான மார்ச் 8ஆம் தேதி “மகளிர் தினமாக” கொண்டாடப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் தடைகள் பலவற்றை தகர்த்து வெற்றி பெற்றவர்கள்தான். கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் ஏழைப் பெண்களைக் கூட சுய உதவிக் குழு இயக்கத்தில் இணைத்து, பயிற்சிகள் பல வழங்கி அவர்களை தொழில் முனைவோராக்கிய பெருமை நமது மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்திற்கு உண்டு என்பதை இந்த மகளிர் தினத்தில் கூறிக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், அவற்றினை சிறப்பாகவும், விரைவாகவும் செய்து முடித்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றிக்காகவும், வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதில் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார்கள்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக வங்கிக் கடன் இணைப்புகள், சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துதல், இளைஞர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்குதல் போன்ற பயனுள்ள பல திட்டங்கள் ஊக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, சுய உதவிக் குழுக்கள் மேலும் ஆர்வத்துடன் செயல்பட்டு, அரசின் திட்டங்களைப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அன்புள்ள சகோதரிகளே,

உலகத்தின் உயிர் மூச்சாக இருக்கும் பெண்களை சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி கொண்டாடப்படும் 'மகளிர் தினம்' பெண்களின் உரிமைக்கு குரல் கொடுத்து, உழைப்பிற்கு மதிப்பளிக்கும் தினமாக இருக்கிறது. இத்தினத்தில் உங்கள் அனைவருக்கும் முற்றம் இதழ் வாயிலாக மகளிர் தின வாழ்த்துகளைக் கூறிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தாய், மனைவி, சகோதரி, தோழி, மகள் என்று நம் உறவின் அனைத்து பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறப்படுவது இதனால்தான். ஒருவரின் சொந்த நாடு கூட, தாய் நாடு என்றுதான் அழைக்கப்படுகிறது. அதேபோல் நதிகள், மலைகள் என்று முக்கியமானவை அனைத்துக்கும் பெண்கள் பெயர்கள்தான் வைக்கப்படுகிறது. நமது நாட்டில் அந்த அளவுக்கு பெண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் பல துறைகளில் சிறந்து விளங்குவது மறுக்க முடியாத உண்மை. குறிப்பாக ஆண்களை எதிர்கொள்வது சிரமம் என்ற நிலையிலிருந்து முன்னேறி ஒவ்வொரு துறையிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக கடுமையான போட்டியைத் தந்து வருகிறார்கள். பெண்கள் என்றாலே ஆசிரியர் அல்லது செவிலியர் வேலைக்குத் தான் என்ற கூற்றெல்லாம் தற்போது மாறிவிட்டது. அதாவது இப்பொழுது ஆகாய விமானம் ஓட்டுவது, ரயில்களை இயக்குவது, அறிவியல் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவது, கணினித் துறையில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்துவது, அரசியல் அதிகாரம் பெற்றவர்களாக, நாட்டை ஆளும் வலிமை படைத்தவர்களாக பெண்கள் முத்திரை பதிக்காத துறையே இல்லை. அந்த அளவிற்கு பெண்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

மக்கள் நலம் நாடும் தமிழ்நாடு அரசு, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் பொருளாதார சுய சார்பிற்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காகவும் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தன்னம்பிக்கை நிறைந்தவர்களாக, சுய மரியாதை மிக்கவர்களாக, திறன் பெற்றவர்களாக, பொறுமை மிகுந்தவர்களாக, சமுதாயப் பொறுப்பு மிக்கவர்களாக, தவறுகளை தட்டிக் கேட்கும் அறச்சீற்றம் கொண்டவர்களாக, பெண்ணுரிமை பெற்றவர்களாக, ஒற்றுமை குணத்துடன் சுய உதவிக் குழுப் பெண்கள் இருக்க வேண்டும். அரசின் திட்டங்களை சுய உதவிக் குழுவினர் அனைவரும் நல்ல முறையில் பயன்படுத்தி தங்களின் வாழ்வாதாரத்தையும் பலப்படுத்திக் கொள்வதுடன், இயக்கத்தின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு மக்கள் நலம் நாடும் தமிழ்நாடு அரசும், சுய உதவிக் குழு மகளிர் நலம் நாடும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் என்று துணை நிற்கும்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)




திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்


**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

ஏழை எளிய பெண்கள் பொருளாதார சுய சார்பு பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் செயல்பாடுகள் அனைத்தும் மகளிருக்கு நன்மை தருவதாகவும், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் உள்ளன.

சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களின் தனித்தன்மையை காத்திடவும், சுய உதவிக் குழு பெயரில் தரமற்ற பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை தடுக்கும் வகையிலும் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களை பதிவு செய்து, அப்பொருட்களுக்கு “மதி” என்ற பெயரில் தனித்துவமான முத்திரையை உருவாக்கி விற்பனை செய்திட வழிவகை செய்துள்ளதுடன், இணைய வழியில் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திட வாய்ப்பு, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை பொதுமக்கள் பார்வையிட்டு வாங்கிட ஏதுவாக “மதி அனுபவ அங்காடியும்” ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் வாயிலாக தனிநபர், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு அளவுகளில் கடனுதவிகள் பெற்றுத் தரப்பட்டு, அவர்களின் வாழ்வாதார வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது.

தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்துறைகளில் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வேலைவாய்ப்புகளும் பெற்றுத் தரப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். இன்னும் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் உங்களின் செயல்பாடுகளுக்கு நம் நிறுவனம் எப்பொழுதும் துணைநிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தன் குடும்பம், தன் மகிழ்ச்சி என இல்லாமல், தடைகளைத் தகர்த்து தன்னலமற்று செயல்படும் வலிமை கொண்ட பெண்களைச் சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்படுவதை நீங்கள் அறிவீர்கள். உங்களின் செயல்பாடுகளுக்கு தடைகள் வரலாம். அவற்றை நீங்கள் புறந்தள்ளிவிட்டு உங்களின் கடமையை மட்டுமே கண்ணாகக் கொண்டு செயல்பட்டு,

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்**

என்ற குறள் வாக்கிற்கேற்ப உங்களின் அனைத்து செயல்பாடுகளும் இருக்க வேண்டும் என்று கூறி, உங்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,
ஸ்ரேயா.
(செயல் இயக்குநர்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

உரமொருவற் குள்ள வெறுக்கைஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு

– (குறள்: 600)

மனதில் உறுதியான ஊக்கமில்லாதவர்கள் உருவத்தில் மனிதர்களாகக் காணப்பட்டாலும், மரங்களுக்கும், அவர்களுக்கும் வேறுபாடு இல்லை.

# உள்ளே...


| | |
|---|---|
| கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் தொடக்கம் | 07 |
| குடியரசு நாள் விழா | 08 |
| அயலகத் தமிழர் தினம் 2024 | 10 |
| தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் குடியரசு தின கொண்டாட்டம் | 12 |
| மாதர்தம்மைப் போற்றுவோம்...! | 20 |
| தேர்வுகளை எதிர்கொள்ள சில யோசனைகள்... | 23 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

# முற்றம்

விலை ரூ. 20/– • மலர் 25 • இதழ் 10 • பிப்ரவரி 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## "மகளிருக்கு புதிய கொள்கை..."



**அன்புள்ள வாசகர்களுக்கு,**

இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தோடு முற்றம் மாத இதழ் தனது 25வது ஆண்டினை வெற்றிகரமாக நிறைவு செய்கிறது என்பதை மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழர்களின் தனிப்பெரும் அடையாளமான பொங்கல் திருநாளை குடும்பத்தோடு மகிழ்ச்சியுடன் கொண்டாடி இருப்பீர்கள் என்பதில் ஐயம் இல்லை. இதனைத் தொடர்ந்து சாதி, மத, இன வேறுபாடுகள் அற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதே சிறந்த ஆன்மீகம் என வலியுறுத்தி வந்த வள்ளலார் அடிகளாரின் ஜோதி தரிசன விழாவும் நடைபெறும் மாதம் இது.

தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டுப் பெண்களுக்கு மேலும் ஒரு சிறப்பு செய்தியை தற்பொழுது வெளியிட்டுள்ளது. "பெண்களுக்கு என மேலும் ஒரு கொள்கை தொகுப்பு வெளியிடப்படும்" என அறிவித்துள்ளது. பெண்களுக்கான ஒட்டுமொத்த வளர்ச்சியினைக் கொடுப்பதற்கு இப்புதிய கொள்கை வழி ஏற்படுத்திக் கொடுக்கும். பெண்களுக்கான கல்வி, பொருளாதார சுதந்திரம், அதிகாரப்பகிர்வு ஆகிய அம்சங்களுக்கு மிக அதிக கவனம் செலுத்துவதன் மூலம் பெண்கள் ஆற்றல் பெறுவதற்கு இந்த மகளிர் கொள்கை பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்களுக்கான இந்த கூடுதல் கொள்கைத் தொகுப்பு பெண்களின் உரிமைப் பயணத்தில் மேலும் ஒரு மைல்கல்லாக அமைகிறது. பெண்களுக்கு சொத்துரிமை, உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட இட ஒதுக்கீடு, விழிப்புணர்வு பெற மகளிர் திட்டம், பெண்கள் உயர் கல்வி பெற உதவித் தொகை, தயக்கமின்றி வெளியில் செல்ல கட்டணமில்லா பேருந்து பயணம், குடும்பத் தலைவிகளுக்கு உரிமைத் தொகை ஆகிய இந்த வரிசையில் தற்பொழுது மகளிருக்கான கொள்கையும் அமைந்துள்ளது.

பெண்கள் ஆற்றல் பெற்று விளங்குவதற்கு இதுபோன்ற நேர்மையான திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசிற்கும் குறிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் முற்றம் மாத இதழ் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்




## கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் தொடக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 19.01.2024 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைக்கும் விதமாக கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிக்கான சுடரை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மாண்புமிகு ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர், மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை, பால்வளத்துறை மற்றும் தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு. எல். முருகன், மாண்புமிகு ஒன்றிய உள் துறை, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. நிசித் பிரமாணிக், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., முன்னோடி விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வாக்காளர் உறுதிமொழி

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் தலைமையில், 25.01.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில், தேசிய வாக்காளர் தினத்தையொட்டி நடைபெற்ற மாநில அளவிலான விழாவில் வாக்காளர் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓய்வு), கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆளுநரின் செயலாளர் திரு. இரா. கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# குடியரசு நாள் விழா

சென்னை, காமராஜர் சாலையில் 26.01.2024 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினையும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் ஆடல் பாடல் கலைநிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.










மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் 26.01.2024 அன்று, சென்னை, காமராஜர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



# சமத்துவப் பொங்கல் விழா



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.01.2024 அன்று சென்னை, கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சமத்துவ பொங்கல் கொண்டாடினார்.

# பொங்கல் பரிசு வழங்கும் பணி தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு ஒன்று மற்றும் ரூ. 1000/- ரொக்கம் வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, 12.01.2024 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டை டி.யூ.சி.எஸ். நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் திரு. த.வேலு, உணவு மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. கே. கோபால், இ.ஆ.ப., உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர் சகாய் மீனா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந. சுப்பையன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# அயலகத் தமிழர் தினம் 2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.01.2024 அன்று சென்னை, நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. கா. சண்முகம், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மலேசியா நாட்டு சட்டம் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை துணை அமைச்சர் திரு. எம்.குலசேகரன், மாண்புமிகு இலங்கை நாட்டின் கிழக்கு மாகாண ஆளுநர் திரு. எம். செந்தில் தொண்டமான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செல்வம் அடைக்கலநாதன், மலேசிய நாட்டு முன்னாள் அமைச்சர் திரு. சுப்பிரமணியன் சதாசிவம், கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. லோகன் கணபதி, இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி மேயர் திருமதி சாருலதா மோனிகா தேவேந்திரன், ஆஸ்திரேலியா நாட்டின் ரிவர்டன் உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். ரவீந்திரன், டர்பன் முன்னாள் துணை மேயர் திரு. லோகி நாயுடு, Zoom Technology தலைவர் திரு. வேல்சாமி சங்கரலிங்கம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.01.2024 அன்று, அயலகத் தமிழர் தினம் 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியைத் துவக்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை பார்வையிட்டார். இவ்விழாவில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னைமாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர், பொதுத்துறை செயலாளர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., மற்றும் அரசுஉயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.









# 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி துவக்கம்

சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 12.01.2024 அன்று தொடங்கி வைத்து, அரங்குகளைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பரந்தாமன், துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தி

புதுதில்லியில் 26.01.2024 அன்று நடைபெற்ற 75வது குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் பழந்தமிழ்நாட்டின் “குடவோலை முறை மக்களாட்சியின் தாய்” என்ற கோட்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் பங்கேற்ற அலங்கார ஊர்தி.





# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் குடியரசு தின கொண்டாட்டம்



சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 26.01.2024 அன்று குடியரசு தின விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் உறுதிமொழி

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 25.01.2024 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.






# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்குவதை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இந்தியன் வங்கி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மகளிர் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அக்குழுக்களின் பொருளாதார சுய சார்பிற்கு வலுசேர்க்கும் வகையில் வங்கிக் கடன் இணைப்புகள் உள்ளிட்ட ஏராளமான கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை செயல்படுத்தி, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் இலக்கை எய்திடவும், சுய உதவிக் குழுக்களுக்கு விரைவாக வங்கிக் கடன் இணைப்புகள் பெற்றுத் தந்திடவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, 03.01.2024 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இந்தியன் வங்கி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களும், இந்தியன் வங்கியின் களப் பொது மேலாளர் திரு. ஜி. ராஜேஸ்வர ரெட்டி அவர்களும், யூனியன் பேங்க் ஆப் இந்தியா சார்பில், சென்னை மண்டலத் தலைவர் திரு. சத்யபன் பெஹெரா அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், இந்தியன் வங்கி மற்றும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றின் அலுவலர்கள் உடனிருந்தனர்.






சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் மகத்தான சாதனைகள் படைத்து வரும்

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சீர்மிகு செயல்பாடுகள்

*11.05.2021 முதல் 31.12.2023 வரை*

மகளிர் பொருளாதார சுயசார்பு பெற்று, தன்னம்பிக்கையுடனும், சுய மரியாதையுடனும் வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் சிறப்பான திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலையிலான ஆட்சியில் அரசின் அனைத்துத் துறைகளும் தங்களின் செயல்பாடுகளில் சாதவனகளை படைத்து வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் "ஒன்றே செய் - நன்றே செய் - இன்றே செய்'' என்னும் வார்த்தைகளுக்கேற்ப சுய உதவிக் குழு மகளிரின் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் படைத்து வரும் சாதனைகளை அறிந்து கொள்வோம் வாருங்கள்.



### சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட, 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாக கொண்டு சுய உதவி குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கமாகும். இதுவரை 7,15,392 உறுப்பினர்களைக் கொண்ட 59,66 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தகுதி உள்ள சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் நலிவுநிலைக் குறைப்பு நிதி ஆகியவை வழங்கப்படுகிறது. இதுவரை சுழல் நிதியாக 44,402 குழுக்களுக்கு 66.69 கோடி ரூபாய், 62,346 சுய உதவிக் குழுக்களுக்கு 616.14 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி மற்றும் நலிவுநிலைக் குறைப்பு நிதியாக 14.59 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளன.

### சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

சுய உதவிக் குழுக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கை துவக்குவதின் மூலம் வங்கியுடனாக இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. வங்கிகளில் பெறப்படும் கடன்கள் மூலம் சுய உதவி குழுக்களை சேர்ந்த உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர். இதுவரை 69,554.14 கோடி ரூபாய் வங்கி இணைப்பு வழங்கப்பட்டுள்ளதன் மூலம் 12,25,083 குழுக்கள் பயனடைந்துள்ளன.



### வாழ்வாதார மேம்பாடு

வாழ்வாதார மேம்பாடு என்பது சுய அல்லது வேலை வாய்ப்பை உள்ளடக்கிய பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கிய வளர்ச்சி அடிப்படையிலான தலையீடுகளின் தொகுப்பாகும். பெண்கள் மற்றும் அவர்கள் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான ஆதாரங்களை உருவாக்குவதற்கு இயற்கை வளங்களை பயன்படுத்துவதன் மூலம் வாழ்வாதார மேம்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### உற்பத்தியாளர் குழுக்கள்

ஒரே ஊராட்சியை சேர்ந்த ஒரே மாதிரியான பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள 15-20 பெண் விவசாயிகளை ஒரே குழுவாக திரட்டி உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இதுவரை, 12,089 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.





### இயந்திர வாடகை மையம்

இயந்திர வாடகை மையம் என்பது வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரே இடத்தில் கிடைக்கச்செய்து விவசாயப் பணிகளுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நியாயமான வாடகைக்கு கொடுப்பது ஆகும். இதுவரை 33 மாவட்டங்களில் 251 இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மதி அங்காடி (Mathi KIOSK)

சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்காக நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா இடங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்ற இடங்களில் மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன.







### பூமாலை வணிக வளாகங்கள் :

மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் உற்பத்திப் பொருட்களை மாவட்டத் தலைநகரங்களில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக மாவட்ட வணிக வளாகங்கள் கட்டப்பட்டன. இவ்வணிக வளாகங்களுக்கு, முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பூமாலை வணிக வளாகம் என பெயர் சூட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

### மதி சிறுதானிய சிற்றுண்டியகம்

சிறுதானியங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், அவற்றை அனைத்துத் தரப்பினரிடமும் கொண்டு சென்றிடவும் சுய உதவிக் குழுக்களின் மூலம் சிறுதானிய சிற்றுண்டியகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த சிற்றுண்டியகங்களில் சிறு தானியங்களில் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.





### மாநில அளவிலான கண்காட்சிகள்:

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் மகளிர் சுய உதவிக்குழு பொருட்களின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் கோடைக் கொண்டாட்டம், பொங்கல் மற்றும் புத்தாண்டு கண்காட்சி, தீபாவளி மற்றும் நவராத்திரி என ஆண்டிற்கு மூன்று முறை கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் மாதந்தோறும் முதல் மற்றும் மூன்றாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சுய உதவிக் குழுவினரால் இயற்கை முறையில் விளைவித்த பொருட்களின் விற்பனைக் கண்காட்சியும் நடைபெறுகிறது.




### மதி அனுபவ அங்காடி

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் தனித்துவம் மிகுந்த பொருட்கள் அனைத்தையும் ஓரிடத்தில் விற்பனை செய்திடும் வகையில் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மதி அனுபவ அங்காடி அமைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் தரமான பொருட்களை www.mathisandhai.com என்ற விற்பனை இணையதளம் வாயிலாகவும் பொதுமக்கள் வாங்கி மகிழ்ந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அதன் திட்டங்களின் சேவைகள் மற்றும் பலன்களை மேம்படுத்துவதற்கான உள்ளமைக்கப்பட்ட வழிமுறையைக் கொண்டுள்ளது. இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதில் அதிக கவனம் செலுத்துகின்றன.



### சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு

நலிவுற்றவர்கள் மற்றும் விடுபட்ட இலக்கு மக்களின் குடும்பங்களை அடையாளம் காணவும் அணிதிரட்டவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய மக்களைக் கொண்டு சிறப்பு சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளின் சிறப்புத் தேவைகளைக் கண்டறிய, வட்டார அளவில் தேவைகள் கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு அரசுத் திட்டங்களின் தகுதியான திட்டப் பயன்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.



### மக்களைத் தேடி மருத்துவம் (MTM):

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தமிழ்நாட்டில் தொற்றா நோய்களை பரிசோதிப்பதற்காக தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் சுகாதார துறையுடன் ஒருங்கிணைந்து 388 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அடையாளம் காணப்பட்டு சுகாதாரத் துறையால் பயிற்சி அளிக்கப்பட்ட சுய உதவி குழு பெண்கள் துணை சுகாதார மையங்களுடன் (HSC) இணைக்கப்பட்டுள்ளனர்.

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (CMBFS):





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.05.2022 அன்று சட்டமன்றத்தில் சட்டப்பேரவை விதி எண் 110-ன் கீழ் ஆரோக்கியமான வருங்கால சந்ததியினரை உருவாக்குவதற்காக அரசு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை, மேல்நிலை பள்ளி (ம) ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, 15.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புரங்களில், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் முதற்கட்டமாக 16 மாவட்டங்களில் (17 வட்டாரங்கள் 346 கிராம ஊராட்சிகளில் உள்ள 963 பள்ளிகளில் உள்ள மையங்கள்) அரசு பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது.

தொடர்ந்து, 25.08.2023 முதல் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவுபடுத்தப்பட்டு, 31,008 தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் 17 இலட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## பாலின வன்முறைக்கு எதிரான பிரச்சாரம்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக, பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு 25.11.2023 முதல் 31.01.2024 வரை விழிப்புணர்வு பிரச்சாரம் மாநிலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு ஊராட்சிகளிலும் நடத்தப்பட்டது. சுவரொட்டிகள் மற்றும் விழிப்புணர்வு பதாதைகள், மனித சங்கிலி பேரணிகள், குறும்படங்கள், திரைப்படங்கள் திரையிடல், கையெழுத்து இயக்கம், மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் செல்லுதல், ரங்கோலிப்போட்டி மூலமும், பள்ளி, கல்லூரிகளில் பெண்கள் உரிமைகள் பற்றிய விவாதங்கள் ஆகியவை மாதம் முழுவதும் நடைபெற்றது.




## தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டம் (DDU-GKY)

DDU-GKY
Deen Dayal Upadhyaya Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

'தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டத்தின்' மூலம் பணியமர்வுடன் கூடிய தொழிற்பயிற்சிகள் ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. முகாம்கள் நடைபெறும் பொழுது தேவையான விவரங்களை வேலை தேடி வருபவர்களுக்கு வழங்கி அவர்களது கல்வித் தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் சரியான வேலையினை தேர்வு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.




486 வட்டார அளவிலான இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தப்பட்டு, 39,301 இளைஞர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பெரும் நிறுவனங்களுடன் இணைந்து மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில் 421 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 68,137 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



கட்டாய பணியமர்வுடன் கூடிய திறன் பயிற்சித் திட்டமான தீன்தயாள் உபாத்தியாய திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் இதுவரை 53,920 கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, 27,847 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கில் ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனங்களின் இதுவரை 51,156 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, 24,657 பயனாளிகளுக்கு சுய வேலை வாய்ப்பு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNLUM)

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்ப்புறங்களில் பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை அடிமட்ட நிலையிலிருந்து லாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்கிறது.



தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புர ஏழை மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக 54,003 புதிய சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 46286 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 46.28 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க புதிதாக 1,525 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 884 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 4.42 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.



சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க 20.548 தனி நபர்களுக்கு 40.95 கோடி ரூபாயும், 12,745 தொழில் குழுக்களுக்கு ரூ. 232.63 கோடி ரூபாயும் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புரங்களில் செயல்படும் 2,82,039 சுய உதவிக் குழுக்களுக்கு 15036.08 கோடி ரூபாய் வங் கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 30,000 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, ரூபாய் 54.73 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

### வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்பது உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாகும். சுய உதவிக் குழு மகளிர் தலைமையிலான கிராமப்புற நிறுவனங்கள் மூலம் கிராமப்புறங்களில் நிலையான தொழில் நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் கிராமப்புற சுய உதவிக்குழு மகளிரை மேம்பாடடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 31 மாவட்டங்களில் (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் தவிர) 120 ஒன்றியங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
TAMIL NADU RURAL TRANSFORMATION PROJECT



### உற்பத்தியாளர் குழுக்கள்

ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் 30 முதல் 150 உற்பத்தியாளர்கள், பொருளாதார அளவின் காரணமாக சிறந்த வருவாயைப் பெறுவதற்காகவும் உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைக்கவும் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இதுவரை 5000 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவைகளுக்கு ரூ. 50.73 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

## தொழிற்குழுக்கள்

10 முதல் 30 உறுப்பினர்கள் கூட்டு உரிமை மற்றும் வணிக நடவடிக்கைகளின் மீது பகிரப்பட்ட வளங்கள் மற்றும் லாபத்துடன் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், உற்பத்தி செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும் மற்றும் வருவாயை அதிகரிக்கவும் ஒன்றுபடுகின்றனர். இதுவரை 1000 தொழிற்குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவைகளுக்கு தொடக்க நிதியாக ரூ. 9.30 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.





## உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்

இது ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் சேவையை வழங்குதல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர் குழுக்களின் முறையான உயர்நிலை ஒருங்கிணைப்பு ஆகும். உரிய தகுதிகளை எய்தியதற்குப்பின் இக்கூட்டமைப்புகளுக்கு துவக்க நிதி வழங்கப்படுகின்றன. இதுவரை 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்குத் துவக்க நிதியாக ரூ. 12.90 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

## சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)

உள்ளூர் தேவைகள் மற்றும் திறன் இடைவெளிகளை பகுப்பாய்வு செய்து, கிராமத்தில் உள்ள பாரம்பரிய மற்றும் உள்ளூர் தொழில்கள், இத்திட்டத்தால் கண்டறியப்படுகின்றன. ஆர்வமுள்ள இளைஞர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் கண்டறியப்பட்டுத் திறன் பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதுவரை 2,526 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 51,193 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ. 19.30 கோடியில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.





## இணைமானியநிதித் திட்டம் (MGP)

இணைமானிய நிதித் திட்டம் (MGP) என்பது ஊரக தொழில் நிறுவனங்களுக்கு கடன் தேவை மற்றும் நிதி நிறுவனங்கள் வழங்கும் விநியோக இடைவெளியை நிரப்ப உருவாக்கப்பட்ட ஒரு நிதி கருவியாகும். கடன் பெற்ற தனிநபர் மற்றும் குழுக்கள் முறையாக 70 கடனை திருப்பிச் செலுத்தியபின்பு மீதமுள்ள 30 திட்ட நிதியினை வங்கிக் கடனுக்கு ஈடாக செலுத்தி எஞ்சிய கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு பெறலாம்.


இணைமானிய நிதித்திட்டத்தின் கீழ், 7,170 நிறுவனங்களுக்கு உதவிட ரூ.91.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 5463 தனிநபர் நிறுவனங்களுக்கு மற்றும் குழு நிறுவனங்களுக்கு ரூ.168.63 கோடி கடன் பெறப்பட்டு இணைமானிய நிதியாக ரூ.56.21 கோடி நிதி அளிக்கப்பட்டு வருகிறது.

## சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)

முன்னோடி விவசாயிகளுக்கு (SPARK) பயிற்சி அளித்து, அவர்கள் மூலம் உற்பத்தியாளர்களுக்கு செயல் விளக்கத்துடன் (Demonstration Plot) கூடிய பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்களில் 3 முதல் 12 மாதங்களுக்கு சமுதாய பண்ணைப் பள்ளிகள் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக இப்பண்ணைப்பள்ளிகளுக்கு ரூ. 64,000 முதல் ரூ. ஒரு இலட்சம் வரை நிதி அளிக்கப்படுகிறது. இதுவரை 6000 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு 1,64,128 உற்பத்தியாளர்களுக்கு ரூ. 51.01 கோடி நிதியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது



மகளிர் மேம்பாட்டிற்காக அயராது செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் ஆக்கப்பூர்வமான பணிகளால் சுய உதவி குழு மகளிர் அனைத்துத் துறைகளிலும் முன்னிலைப் பெற்று வருகின்றனர் என்பது நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் செய்தியாகும்.



# மாதர்தம்மைப் போற்றுவோம்...!

இன்றைய உலகில் பெண்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவது மறுக்க முடியாத உண்மையாகும். வீட்டிற்குள்ளே இருந்த பெண் சமுதாயம் தற்போது ஒவ்வொரு துறையிலும் ஆண்களுக்கு நிகராக சாதனைகளைப் படைத்து வருகிறது என்றால், அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றி தினமே ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி கொண்டாடப்படும்"மகளிர் தினமாகும்".

ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்ததை நினைவு கூரவும், பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்ணுரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மார்ச்-8, 1857இல் நியூயார்க்கில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள், நாட்டில் இயற்றப்பட்ட புரட்சிகர தீர்மானங்களையும், சட்டத் திருத்தங்கள் மூலமான உரிமைகளையும் முன் வைத்து போராட்டங்களை நடத்தின.

18ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் 1857ம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பெண்களுக்கு பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது.

ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதால் கொதித்தெழுந்த பெண்கள், ஆண்களுக்கு இணையான ஊதியம் மற்றும் உரிமைகள் வழங்கக் கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு செவி சாய்க்காததால், நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்த பெண் தொழிலாளர்கள், 1857ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் தேதி போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர்.

அடிமைத்தனம் எங்கு இருக்கின்றதோ அங்குதான் சுதந்திரத்திற்கான தேடல் இருக்கும். பெண் அடிமைத்தனம் எங்கு இருக்கின்றதோ அங்குதான் பெண் சுதந்திரம் மற்றும் பெண்கள் எழுச்சி தேவைப்படுகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமஉரிமையை மையமாக வைத்து கி.பி. 1909-ல் அமெரிக்க சோசலிஸ்ட் கட்சியினர் முதல் முதலாக மகளிர் தினத்தை பிப்ரவரி மாதம் 28ம் தேதி கொண்டாடினர். இதன் தொடர்ச்சியாக 1911, மார்ச் 19 அன்று ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் அரசு அலுவலகங்கள் முன் திரண்டு வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் சமஉரிமை அளிக்கவேண்டும் எனப் போராட்டம் நடத்தினர். இதனால் ஏற்பட்ட கிளர்ச்சியினால் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகளில் வேறுபட்ட நாட்களில் 1917ஆம் ஆண்டு வரை இவ்வாறான குரல்கள் ஒலித்து வந்தன.

1917ஆம் ஆண்டிற்குப்பின் உலக மகளிர் அமைப்புகள் ஒன்று கூடி மகளிர் தினத்தை மார்ச்-8 என்று கட்டமைத்தனர். இத்தகைய பெண்கள் போராட்டங்களால் 1945-ல் சான்பிரான்ஸிஸ்கோவில் ஐக்கிய நாடுகள் ஒன்றுகூடி பெண்கள் சமஉரிமை (Gender Equality as a Fundamental Human Rights) என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

அதன் பிறகு 1907ஆம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராடத் தொடங்கினர். 1910ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடந்தேறியது. இதில் உலகின்




















பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு காட்டினர். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜெர்மனியைச் சேர்ந்த கிளாரே செர்கினே, மார்ச் 8ஆம் தேதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடைகளால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை. 1920ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா, ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று பிரகடனம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து 1921ஆம் ஆண்டு முதல் மார்ச் 8ஆம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.1975ஆம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

தற்போது உலகின் பல நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்துக்கு விடுமுறை வழங்கப்படுகிறது என்பது பெண்கள் போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது. மென்மைக்கு ஒப்பானது தான் பெண்மை என்று சொல்லி சரித்திரத்தில் பெண்களின் திறமைகளை பல்வேறு இடங்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தாலும் கூட அதற்கு சற்றும் சளைக்காமல் அணு முதல் அண்டம் வரை தமது திறமைகளை நிலைநாட்டிய வண்ணமே அன்று முதல் இன்றுவரை பெண் இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக என்றும் நம் உறவின் அனைத்து பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாது அதனை எதிர்கொண்டு வாழ்வில் வெற்றி கண்ட பல பெண்கள் நம் மத்தியில் வாழ்கின்றனர். அவ்வாறான பெண்களுக்கு மட்டுமன்றி அனைத்துலக பெண்களுக்கும் இன்றைய நாளில் மகளிர் தின வாழ்த்துகளை தெரிவிப்பதில் “முற்றம்”மகிழ்ச்சியடைகின்றது. ●

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

## மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com



# தேர்வுகளை எதிர்கொள்ள சில யோசனைகள்...

இது தேர்வு காலம். பிளஸ் 2 தேர்வு அதைத் தொடர்ந்து 11 மற்றும் 10 ஆம் வகுப்புத் தேர்வு பின்னர் மற்ற வகுப்புகளுக்கான தேர்வு அப்படியே நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வு என அட்டவணை வரிசை கட்டி நிற்கிறது. இந்தத் தேர்வுகளுக்காக ஓராண்டுக்கும் மேல் தங்களைத் தயார் செய்து கொண்டிருப்பார்கள். என்றாலும், இந்த நாட்களை எப்படி எதிர்கொள்வது? நல்ல உடல்-மன நலனோடு தேர்வை எதிர்கொள்ள என்னென்ன செய்ய வேண்டும், என்னவெல்லாம் செய்யக் கூடாது என்பதைப் பற்றி பார்ப்போம் வாருங்கள்

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தனித்தன்மை இருக்கும். படிக்கும் நேரத்தின் அளவு, கவனிக்கும் திறன், நினைவுத் திறன் ஒவ்வொரு பிள்ளைக்கும் மாறுபடும். சிலருக்கு ஒருசில பாடங்கள்தான் நன்றாகப் படிக்க வரும். ஆகவே, “அவன் நன்றாகப் படிக்கிறான் பார்! அவனை விட அதிகமாக மார்க் எடுக்க வேண்டும்” என்றெல்லாம் ஒப்பீடு செய்யக் கூடாது.

நம் பிள்ளைகளுக்கு நாம்தான் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். தொலைக்காட்சி, செல்பேசி பார்க்கக் கூடாது என்று அவர்களைச் சொல்லிவிட்டு நாம் அவற்றில் மூழ்கக் கூடாது.

தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களின் மிகப் பெரிய எதிரி பதற்றம். இதனால், 90 மதிப்பெண் எடுக்க வேண்டிய இடத்தில் 60, 70 மதிப்பெண் கிடைக்கக்கூடிய சூழல் ஏற்படும். நன்றாகப் படித்ததுகூட நினைவுக்கு வராது. எதிர்பார்ப்புகள் அதிகமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். மதிப்பெண்ணை இலக்காகக் கொள்ளாமல், ‘நான் ரசித்துப் படித்ததை நன்றாக எழுதுவேன்’ என்ற தன்னம்பிக்கை கொண்டு தேர்வை எழுதினால் நல்ல பலன் கிடைக்கும். இந்த மனநிலையைப் பெற்றோர்கள்தான் உருவாக்க வேண்டும்.

தேர்வு சமயத்தில் மாணவர்கள் உணவு விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, பெற்றோர்கள்தான் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு அவர்கள் சரியான நேரத்தில் போதுமான அளவு சாப்பிடுகிறார்களா என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். முக்கியமாக, காலை உணவைத் தவிர்க்கவே கூடாது.

விழுந்து விழுந்து படிக்கும் பிள்ளைகள் போதுமான அளவு ஓய்வு எடுக்கிறார்களா? என்பதையும் பெற்றோர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். ஆறு மணி நேரத்துக்கும் குறையாமல் தூங்குவது அவசியம்.

இந்தச் சமயத்தில் தலைவலி, காய்ச்சல் வருவது இயல்புதான். ஆரம்பத்திலேயே மருத்துவரைப் பார்த்து உரிய சிகிச்சைகள் எடுத்துக்கொண்டு அவர் தரும் மருந்து, மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

அளவுக்கு அதிகமாகப் படித்துத் திணித்துக்கொள்வதை விட படித்ததை ஒருங்கிணைத்து எவ்வளவு அழகாக எழுதுகிறோம் என்பது நல்ல மதிப்பெண்களுக்கு உதவும்.

எனவே, பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் மாணவ மாணவியர் பதற்றமின்றி தேர்வை எதிர்கொள்ள வேண்டும். இந்தத் தேர்வு மட்டுமே வாழ்க்கை இல்லை. மதிப்பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. மதிப்பெண்ணை விடவும் வாழ்க்கை முக்கியம் என்பதே இதன் அர்த்தம்.

பொதுத்தேர்வை எழுதும் மாணவ மாணவியர் அனைவருக்கும் முற்றம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ■

# சணல் பொருள்களில் லட்சங்கள்... சவால்களில் ஜெயித்த மகளிர் படை!

**“ஒரு காலத்துல எங்க ஊர் எல்லையைத் தாண்டணும்னாலே யாரையாவது துணைக்குத் தேடுவேன். சமூகத்தை எதிர்கொள்ளவே தயக்கமா இருக்கும். படிக்காம விட்டுட்டோமேனு வருத்தப்பட்டிருக்கேன். ஆனா, இப்போ எல்லாம் மாறியிருக்கு... நாங்க தயாரிக்கிற பொருள்களை விற்க, இந்தியா முழுக்க பயணம் பண்ணிட்டோம். நாங்க சம்பாதிக்கிறோம். எங்களுக்காக வாழறோம். தைரியமா வாழறோம்” - தன்னையும் தன் குழு உறுப்பினர்களையும் அறிமுகம் செய்கிறார் அமலோற்பவமேரி.**

சணலில், பை தொடங்கி பல வகையான வீட்டு உபயோகப்பொருள்களைத் தயாரிக்கிறார்கள் கோயம்புத்தூர் மாவட்டம் பாப்பன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, ‘ரோஜா’ மகளிர் சுய உதவிக் குழுவினர். வாழ்வாதாரத்துக்காக காய்கறி வியாபாரம், மெத்தை கவர் தயாரிப்பு என பல தொழில்களைச் செய்து வந்தவர்கள், கடந்த 15 வருடங்களாக சணல் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். தங்கள் வெற்றிக்கதையை நம்மிடம் பகிர்கிறார்கள்.




www.vikatan.com





• அமலோற்பவமேரி



• முத்துலட்சுமி



• கிருபா

“நாங்க யாரும் பெருசா படிக்கல. அதனால தறி ஓட்டிக் கிடைச்ச வருமானத்துல வாழ்க்கை நடத்திட்டிருந்தோம். தினம் மூணு வேளை சாப்பாடு கிடைக்கிறதே பெரிய விஷயமா இருந்துச்சு. ஆசைப்படுற சின்ன பொருளைக் கூட வாங்க முடியாது. இப்படியான சூழ்நிலையில இருந்த எங்களுக்கு 2002-ல மகளிர் சுய உதவிக்குழு பத்தி தெரிய வந்துச்சு. பத்து பெண்கள் ஒண்ணா சேர்ந்து குழுவை ஆரம்பிச்சோம். குழுவுல சேர்ந்ததும் 25,000 ரூபாய் கடன் உதவி கிடைச்சுது. அந்தப் பணத்துல காய்கறி வியாபாரம் தொடங்கினோம். அப்புறம் மெத்தைகளுக்கான கவர்கள் தயாரிச்சு விற்க ஆரம்பிச்சோம். இப்படி சீசனுக்கு தகுந்த மாதிரி வேற வேற தொழில்களைப் பண்ணிட்டிருந்தோம். நிரந்தர வருமானம் இல்லை. அப்பதான் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சணல் பைகள், அலங்காரப் பொருள்கள் தயாரிக்கிறதுக்காக அரசாங்கம் கொடுத்த பயிற்சி வகுப்புகள்ல கலந்துகிட்டு பயிற்சி எடுத்துக்கிட்டோம். அரசாங்கத்துலேருந்து ரெண்டு லட்ச ரூபாய் கடன் உதவி கிடைச்சுது. அதை வெச்சு ரெண்டு தையல் மெஷின்கள் வாங்கி சணல் பைகள் தயாரிக்க ஆரம்பிச்சோம்” என்ற குழு உறுப்பினர் முத்துலட்சுமியைத் தொடர்ந்து, சணல் பைகள் தயாரிப்பு முறை பற்றி பேச ஆரம்பித்தார் கிருபா.

“சென்னை, கொல்கத்தாவுல இருந்து மெட்டீரியல்கள் வாங்குறோம். ஆரம்பத்துல நாங்க தைச்ச பைகளைத் தூக்கிக்கிட்டு நிறைய கடைகள் ஏறி இறங்கியிருக்கோம். ஸ்டால்கள் போட்டு விற்பனை செஞ்சோம். எங்க தயாரிப்புகள் பத்தி வெளி மாவட்டங்களுக்கும் தெரிய ஆரம்பிச்சுது. இப்போ 750 வகையான பொருள்களை டிசைன் பண்றோம். 30 ரூபாய் லேருந்து 700 ரூபாய் வரைக்கும் எங்ககிட்ட பொருள்கள் இருக்கு. கடைகள், திருமண வீடுகள், கார்ப்பரேட் நிறுவனங்கள்னு நிறைய பேர் நாங்க தயாரிக்கிற பொருள்களை வாங்கறாங்க” என்று கிருபா முடிக்க, குழுத்தலைவர் அமலோற்பவமேரி பேச ஆரம்பித்தார்.

“எங்களுக்குனு இப்போ தனி யூனிட் இருக்கு. நிறைய ஆர்டர்கள் வரும்போது எங்க ஊர் ஆண்களுக்கும் நாங்க வேலை வாய்ப்பு தர்றோம். துணி ஆர்டர் போடுறது, கட் பண்றது, தைக்கிறது, பிரின்ட் பண்றது, ரன்னர் போடுறது, ஸ்டால் போடுறதுன்னு யாருக்கு என்ன வேலை தெரியுமோ அதைப் பண்ணிட்டிருக்கோம். ஆர்டர் பொறுத்து மாசத்துக்கு குறைஞ்சது 2 லட்சத்துல இருந்து ஏழு லட்சம் ரூபாய் வரை டர்ன் ஓவர் பண்றோம். எங்க பிள்ளைகளைப் படிக்க வெச்சுருக்கோம். குடும்பத்துக்கு பாரமா இருக்கோம்னு கவலைப்பட்ட நாங்க இன்னிக்கு குடும்பத்தோட பாரத்தை தூக்கிச் சுமக்குற நிலைமைக்கு வந்துருக்கோம். தன்னம்பிக்கையோட போராடினா போதும். நல்லதெல்லாம் தானா நடக்கும்.”

- உற்சாக வார்த்தைகளுடன் விடை கொடுத்தார்கள் உதாரணப் பெண்கள்.

நன்றி! அவள் விகடன்
19:12:2023

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின்
**ஆதரவை தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

## வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சியால் (EST&P) கிடைத்த வாழ்வாதாரவளர்ச்சி

சேலம் மாவட்டம், அம்மாபேட்டை மண்டலம், வாய்க்கால்பட்டறை, இராமமூர்த்தி புதூர் பகுதியைச் சேர்ந்தவர் B.Com., பட்டதாரி துரைக்கண்ணன். இவரின் தந்தை திரு.பாலமுருகன், வெல்டிங் செய்து கொடுக்கும் பணியினை செய்து வருகிறார். துரைக்கண்ணன் சிறு வயது முதல் பள்ளி விடுமுறை நாட்களில் தந்தையுடன் வெல்டிங் வேலைக்கு சென்று வந்துள்ளார். தனது கல்லூரி படிப்பை முடித்தபின் அடுத்து என்ன செய்வதென்று மனஉளைச்சலில் இருந்த துரைக்கண்ணன், சேலம் மாவட்டத்தில் “தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்” மூலம் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெறுவதை செய்தித்தாள் மூலமாக அறிந்து கொண்டு, உடனடியாக “Amritaa Educational Trust” என்ற பயிற்சி நிறுவனத்தை தொடர்பு கொண்டு Telecom - Customer Care Executive / Call Center Relationship பயிற்சிக்கு விண்ணப்பித்தார்.

03.08.2022 முதல் 21.10.2022 வரையில் நடைபெற்ற Telecom - Customer Care Executive / Call Center Relationship என்ற பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்த துரைகண்ணன், கூடுதலாக Spoken English, Personality Development ஆகிய பயிற்சிகளிலும் ஈடுபட்டு, தனது தனித்திறமைகளை வளர்த்துக் கொண்டார். பயிற்சியில் தேர்ச்சி பெற்ற துரைகண்ணனுக்கு தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.11,000/- ஊதியத்தில் Marketing Cum Junior Clerk (Trainee) என்ற பணிவாய்ப்பு வழங்கப்பட்டு, சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்.

சிறு வயது முதலே வாழ்வில் சிரமப்பட்டு வந்த தனக்குப் பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்றுத் தந்த “தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு” துரைகண்ணன் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.



## வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த இயக்கம்



எனது பெயர் ச. லதா, சென்னை பார்க் டவுன் பகுதியில் வசித்து வரும் நான் எனது குடும்பத்தினருடன் இணைந்து அப்பளங்களைத் தயாரித்து சிறிய அளவில் விற்பனை செய்து வந்தேன். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் பார்க் டவுன் பகுதியில் “சாய்பாபா மகளிர் சுய உதவிக் குழு” வினை ஆரம்பித்தேன்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் உணவு திருவிழா மற்றும் குறளகத்தில் அமைந்துள்ள கடைகளில் நான் தயாரிக்கும் அப்பளங்களை விற்பனை செய்யத் துவங்கினேன். அதிக அளவில் அப்பளங்கள் தயாரிக்கத் தேவைப்படும் மூலதனத்திற்காக குழுவில் உள்கடன் மற்றும் வங்கிக் கடன் போன்றவற்றை குறைந்த வட்டியில் பெற்றேன். இதனால் எனக்கு மனதைரியமும் தன்னம்பிக்கையும் கிடைத்தது.

தற்போது வங்கி கடன் மூலம் கரும்பு ஜூஸ் கடை எடுத்து நடத்தி வருகிறேன். எனது பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது. எனக்கு சரியான வழிகாட்டுதலை அளித்து மகளிர் சுய உதவிக் குழுவை ஆரம்பித்து கொடுத்து, அதன் பிறகு வங்கி கடனையும் பெற்றுக் கொடுத்து எனது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ***ச. லதா***, சாய்பாபா மகளிர் சுய உதவிக் குழு,
பார்க் டவுன், சென்னை பெருமாநகராட்சி.

# வறுமையைப் போக்கிய வாழ்வாதார இயக்கம்

என் பெயர் சுகன்யா (க/பெ. சுரேஷ்), நாமக்கல் மாவட்டம், காளப்பநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட தொட்டியப்பட்டி இந்திரா காலனியில் வசித்து வரும் நான், 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் சுமைதூக்கும் தொழிலாளி. எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது கணவரின் குறைவான வருமானத்தில் குடும்பத்தை நடத்துவதற்கு சிரமமாக இருந்தது. போதிய வருமானம் இல்லாததால் எனது குடும்பம் வறுமையான நிலையில் இருந்தது.


இந்நிலையில் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டு, வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்படும் என்ற விபரத்தை தெரிந்து கொண்டு, இலவச பயிற்சிக்காக விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனது விருப்பத்தின்படி இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதல் படி நடத்தப்படும் தீபம் பயிற்சி நிறுவனத்தில் Customer care Executive and Telecom Relationship பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட எனக்கு, பயிற்சிக்குத் தேவையான பொருட்கள், சீருடை போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு, ஆங்கிலம் மற்றும் கணினி குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சிக்குப் பின்னர், நாமக்கல் நகராட்சியில் உள்ள ஒரு ஆடிட்டர் அலுவலகத்தில், தொலைபேசியில் வாடிக்கையாளர்களுக்குத் தேவைப்படும் சேவையை தெரிவித்தல் மற்றும் கணினியில் தகவல்களைப் பதிவு செய்யும் பணி வழங்கப்பட்டு, தற்போது மாதம் ரூ. 8000/- ஊதியம் பெற்று வருகின்றேன்.

தற்போது எனக்கு கிடைக்கும் ஊதியத்தின் மூலம் எனது குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது. இதனால் எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கி வருகிறது. எனக்கு இலவசமாக பயிற்சி வழங்கி, வேலைவாய்ப்புப் பெற்றுத் தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

~ ***சுகன்யா,*** தொட்டியப்பட்டி கிராமம்,
காளப்பநாயக்கன்பட்டி, நாமக்கல் மாவட்டம்.



# வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

## வேலையற்ற மகளிருக்கு வாய்ப்பு தந்தோம்! வாழை நாரில் கைவினைப் பொருட்கள் படைக்கும் ஆற்றல் தந்தோம்!!

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டாரம், வேட்டுவபாளையம் ஊராட்சியில், அ.குரும்மபாளையம், அசனளிப்பாளையம் மற்றும் வேட்டுவபாளையம் என 3 குக்கிராமங்கள் உள்ளன. இந்த குக்கிராமங்களில் செயல்படும் சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள 35 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு வாழைநார் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அவர்களின் ஊராட்சியிலேயே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பயிற்சிக்கான சமுதாயத் திறன் பள்ளி தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து 26.06.2023 அன்று நிதியுதவி பெறப்பட்டு, அனைவரின் வசதிக்கேற்ற வகையிலான இடம் தேர்வு செய்யப்பட்டு, வாழை நார் கைவினைப் பொருட்கள் தயாரிப்பதில்15 வருடங்கள் அனுபவம் வாய்ந்த பயிற்றுநரான திரு. சங்கர சுப்பிரமணியம் அவர்களால் 12.09.2023 அன்று பயிற்சி தொடங்கப்பட்டது. சமுதாயத் திறன் பள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்ட வேட்டுவபாளையம் ஊராட்சியில் வசிக்கும்பெண்கள் தினமும் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தவறாது பயிற்சியில் கலந்து கொண்டனர்.

பயிற்சியின் நிறைவு நாளன்று, பயனாளர்களுக்கு வாழைநார் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்குழுவாகத் தொழில் தொடங்கவும், தொழிலுக்கான நிதியுதவியாக இடைமானிய நிதிக்கடன் (MGP) பெறுவது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் பயிற்சிக்கான சான்றிதழ்கள் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இப்பயிற்சியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, பயிற்சி பெற்ற பெண்கள், இதன் மூலம் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள திட்டமிட்டுள்ளனர். தங்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு பயிற்சி பெற்ற பெண்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## தொழிலில் வளரும் திருப்பூர் மாவட்டம்!
## தொடர்ந்து ஆதரவு வழங்கும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்!!

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டாரத்தில் 'கார்மெண்ட்ஸ் தையலில் ஒருங்கிணைந்தக் கூட்டக் கலந்தாய்வு சந்திப்பு' கூட்டத்தை வாழ்ந்து காட்டுவோம் திட்டம் நடத்தியது. இதில் ஆடை தைத்தல் மற்றும் வடிவமைக்கும் நிறுவனத்திலிருந்து மூத்த நிறுவனர் டாக்டர் P. விஜி மற்றும் திரு. ஐயப்பன், Nift Tea College of Knitwear Fashion திரு. அருள் செல்வன், தன்னார்வத் தொண்டு நிறுவனத்திலிருந்து திரு. குமரகுரு மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மாநில அலுவலகத்திலிருந்து திரு. பாபு (ACOO), திரு. நசீர் (DYCOO) மாவட்ட அலுவலகத்திலிருந்து இளம் தொழில் வல்லுநர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் வட்டார அணித்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

தையல் ஒருங்கிணைந்த கூட்டக் கலந்தாய்வு வட்டாரங்களில் ஏற்கனவே நிதியுதவி அளிக்கப்பட்ட தொழிற்குழுவின் பயனாளிகளை வரவழைத்து அவர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி, குழு விவாதங்கள் நடத்தப்பட்டு அவர்களுக்கான தேவைகள், விற்பனை செய்வதற்கு உண்டான தீர்வுகள், விளம்பரம் செய்வது, வணிக அடையாளம் மற்றும் சந்தைப்படுத்துதல், பணி வாய்ப்புகள், நிறுவன ஊக்குவிப்பு மற்றும் இணைய வணிகம் போன்ற தேவைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கான தொழில் மேம்பாட்டுத் தீர்வுகள் வழங்கப்பட்டன.

வாழ்ந்த காட்டுவோம் திட்டத்தின் மூலம் கொரோனா நிதியுதவி பெற்ற தொழிற்குழுக்கள், தொடக்க நிதி பெற்ற தொழிற்குழுக்கள் மற்றும் அதன் தலைவர், செயலாளர், பொருளாளர் என முக்கிய பொறுப்பில் உள்ள 6 குழுக்களின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். திட்டத்தின் அலுவலர்கள் ஒவ்வொரு குழுவிற்கான கேள்விகளை எழுப்பி, அவர்களின் தேவைகள் என்னென்ன என்பதைக் கேட்டறிந்தனர்.

டாக்டர் விஜி அவர்கள், கார்மெண்ட்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான தரம், திறன் மற்றும் சரியான நேரத்தில் பொருட்களை வழங்குவது குறித்த 3 முக்கியக் கூறுகளைத் தெரிவித்தார். திரு. அருள் செல்வன் அவர்கள் NIFT Tea நிறுவனத்தின் நோக்கமான சமூகப் பொறுப்புணர்வான தனித்துவக் கருத்தாக்கம், பொருட்களைத் தயாரித்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் நிலையாக நிறுவனத்தை நடத்துதல் குறித்து எடுத்துக் கூறியதுடன், NIFT Tea மூலமாக சிறப்புப் பயிற்சிகள், வழிகாட்டுதல் மற்றும் தரத்தைப் பராமரித்தல் போன்றவைத் தொடர்பானப் பயிற்சிகள் சிறந்த முறையில் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிட்டு, தரம் மிகுந்த பொருட்களை வழங்கும்போதுதான் வாடிக்கையாளர்களையும், பணி வாய்ப்பு வழங்கும் நிறுவனங்களையும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று எடுத்துரைத்தார்.

சமுதாயத்திறன்பள்ளியின்மூலம்பயிற்சிபெற்றவர்கள் உருவாக்கிய வாழை நார் உற்பத்திப் பொருட்கள், மலைவாழ் மக்கள் தேங்காய் மூடியில் உருவாக்கிய பொருட்கள் ஆகியவற்றை பார்வையிட்ட மாநில அலுவலர்கள், பயனாளர்களுக்கு இடைமானிய நிதிக் கடன் (MGP) உதவியைப் பெற்றிட உரிய ஆலோசனைகளை வழங்கியதுடன், திருப்பூர் மாவட்டத்தின் தொழில் மேம்பாட்டிற்கு உண்டான ஆதரவுகளை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.



## உற்பத்தியாளர் குழுவாகத் தரம் உயர்கிறோம்! தீவன விற்பனையில் மேம்படுகிறோம்!!

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியாம்பாறை வட்டாரம், லந்தக் கோட்டை ஊராட்சியில் செயல்படும் உழவர் உற்பத்தியாளர் குழுவின் வெற்றி குறித்து அதன் உறுப்பினர்கள் கூறுவதைக் கேட்போம் வாருங்கள்.

"எங்கள் உழவர் உற்பத்தியாளர் குழுவினை 20.07.2019 அன்று தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 30க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்தோம். எங்கள் குழுவிற்கு ஒரு இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டது. அந்தக் தொகையை எங்கள் குழுவினருக்கு பிரித்து வழங்கி, பிறகு கடன் திருப்பம் செய்து வாழ்வாதார இயக்கத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தி வந்தோம்.

இந்த நிலையில், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்த பிறகு, திட்டத்தின் அலுவலர்கள் எங்களது குழு உறுப்பினர்களைக் கொண்டு இரண்டு முறை குழுக் கூட்டம் நடத்தி, எங்கள் உறுப்பினர்கள் என்னென்ன பொருட்களை விவசாயம் செய்கின்றனர்? பால் உற்பத்தியை எத்தனை உறுப்பினர்கள் செய்கின்றனர்? என்ற தகவல்களைப் பெற்றனர். அதன் பிறகு, நீங்கள் இணைந்து விவசாயம் சார்ந்த உற்பத்தியைப் பெருக்குவதற்கான தொழிலை ஏன் செய்யக் கூடாது? என கேள்வி எழுப்பினார்கள். எங்களுக்குள்ளும் இது ஒரு ஆர்வத்தைத் தூண்டியது. அதன் அடிப்படையில் நாங்கள் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கான தொழிலான மாட்டுத் தீவனம் உற்பத்தித் தொழிலைத் தேர்வு செய்தோம்.

பின்னர் எங்கள் குழுவில் உழவர் உற்பத்தியாளர்களை அதிகரித்து 60 உறுப்பினர்கள் ஆனோம். எங்கள் உற்பத்தியாளர் குழுவின் தொடக்க நிதிக்காக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திடம் விண்ணப்பித்து, தொடக்க நிதியாக ரூ. 75,000/- பெற்றோம். இந்தத் தொகையைக் கொண்டு மாட்டுத் தீவனம் விற்பனை செய்யும் தொழிலை தொடங்குவதற்காக மாட்டுத் தீவனத்தின் விலை குறித்த விபரங்களை பிற கடைகளில் கேட்டறிந்தோம்.

அடுத்ததாக எங்கள் குழுவில் விவாதித்து, எங்கள் ஊராட்சியிலும், எங்களது உற்பத்தியாளர் குழுவிலும் அதிகம் பயன்படுத்தும் மாட்டுத் தீவனத்தைக் கொள்முதல் செய்து விற்பனை செய்திட முடிவு செய்து, மொத்த விற்பனைக் கடைகளிலிருந்து மாட்டுத் தீவனத்தைக் கொள்முதல் செய்து விற்பனையைத் தொடங்கினோம்.

நாங்கள் விற்கும் தீவனம் தரமானதாகவும், மற்ற கடைகளை விட விலை சிறிது குறைவாக இருப்பதாலும், பண்ணையாளர்கள் கேட்கும் தீவனத்தை கொடுப்பதாலும் இதுவரை ஐந்து முறை மாட்டுத் தீவனத்தைக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளோம். இது எங்களது உற்பத்தியாளர் குழு உறுப்பினர்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் எதிர்வரும் காலங்களில் விவசாயம் மற்றும் பால் உற்பத்திக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் விற்பனை செய்வது என முடிவு செய்துள்ளோம். எங்களுக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்து எங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்கள் உற்பத்தியாளர் குழுவின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றனர்.



# பனீர் பிரியாணி

வீட்டில் நாம் சிக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி, வெஜிடபிள் பிரியாணி, மீன், இறால், புலாவ் என நிறைய விதமாக பிரியாணியை செய்து சாப்பிட்டு இருப்போம். இந்த பதிவில் நாம் பனீர் பிரியாணி செய்வது எப்படி என்பதை பார்க்கலாம்.

## தேவையானப் பொருட்கள்



பாசுமதி அரிசி - 1/4 கிலோ (1 மணி நேரம் ஊற வைக்கவும்), பனீர் -200 கிராம் (சிறு துண்டுகளாக நறுக்கியது), எண்ணெய்-2 டீஸ்பூன், நெய், கரம் மசாலா, மிளகாய் தூள் தலா 1 டீஸ்பூன், பிரியாணி இலை, இலவங்கப்பட்டை, வெங்காயம், தக்காளி-தலா 1, ஏலக்காய், கிராம்பு, பச்சை மிளகாய் தலா 3, இஞ்சி பூண்டு விழுது 1 டேபிள்ஸ்பூன், கொத்தமல்லி, புதினா தலா 1 கைப்பிடி, மஞ்சள் தூள் 1/4 டீஸ்பூன், கொத்தமல்லி தூள் 1/2 டீஸ்பூன், தயிர் 1/4 கப், தேவையான அளவு உப்பு.

## செய்முறை:

ஒரு குக்கரை அடுப்பில் வைத்து அதில் 2 டேபிள் ஸ்பூன் எண்ணெய், 1 டேபிள் ஸ்பூன் நெய் ஊற்றி, அடுப்பை ஆன் செய்யவும். இரண்டும் சூடானதும், அதில் பிரியாணி இலை, இலவங்கப்பட்டை, ஏலக்காய், கிராம்பு என அனைத்தையும் சேர்த்து ஒரு முறை கலந்து விட்டு, பின்னர் அதில் நறுக்கிய வெங்காயத்தை சேர்க்கவும். வெங்காயம் பொன்னிறமாக மாறிய பின் அதில் பச்சை மிளகாய், இஞ்சி பூண்டு பேஸ்ட் என அனைத்தையும் சேர்த்து ஒரு முறை கலந்து, பின்னர் ஒரு கைப்பிடியளவு புதினா இலை சேர்த்து கலந்து விடவும்.

பின்பு அதில் மஞ்சள் தூள், மல்லித்தூள், கரம்மசாலா, காரத்திற்கு ஏற்ப மிளகாய் தூள் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். பின்னர் தக்காளியை நறுக்கி அதில் சேர்த்துக் கொள்ளவும். நன்கு கலந்த பின் அதில் தயிரை சேர்த்து, அதனை நன்றாக கலந்து கொள்ளவும். சிறிய துண்டாக நறுக்கிய பனீரை அதனுடன் சேர்த்து கலந்து விடவும். 1 நிமிடத்திற்குப் பிறகு ஊற வைத்த பாசுமதி அரிசியை சேர்த்து நன்றாக கலந்து விடவும்.

நாம் எப்போதும் குக்கர் வைப்பதற்கு எவ்வளவு தண்ணீர் வைப்போமோ அது மாதிரி இதற்கும் தண்ணீர் சேர்த்து, அதன் கூடவே தேவையான அளவு உப்பு சேர்த்து, கடைசியாக கொத்தமல்லி இலை மேல் தூவி விட்டு கடைசியாக நெய் விட்டு கலந்து விட்டு மூடி வைத்து விடலாம். விசில் வந்தவுடன் குக்கரை அடுப்பில் இருந்து இறக்கி, ஆறிவுடன் வெங்காய பச்சடியுடன் சேர்த்து சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும் இந்த பனீர் பிரியாணி.

## பயனுள்ள சிறு குறிப்புகள்

- பூண்டு, வெங்காயம் போன்றவைகளை நறுக்குவதால் கத்தியில் ஏற்படும் துர்நாற்றத்தை போக்க, சிறிதளவு உப்பை கத்தியில் தடவி குளிர்ந்த நீரில் கழுவவும்.
- பால் பாத்திரத்தின் அடியில் ஒட்டிக் கொள்ளாமல் இருக்க பாத்திரத்தை முதலில் குளிர்ந்த நீரால் நன்கு கழுவ வேண்டும்.
- கோதுமை உள்ள பாத்திரத்தில் ஒரு கொத்து வெந்தயக் கீரையை போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.
- இரவில் படுப்பதற்கு முன் ப்ளீச்சிங் பவுடரைச் சிறிது எடுத்து கழிப்பறையிலும் குளியலறையிலும் தூவி விட்டு அப்படியே விட்டு விட வேண்டும். கரப்பான் பூச்சித் தொல்லை இருக்காது.
- சமைக்கும் போது எரிபொருள் சிக்கனம் செய்ய வேண்டும். கீரையைத் தவிர எது சமைத்தாலும் பாத்திரத்தை மூடி வையுங்கள்.
- மொசைக் தரையில் அழுக்கு நீங்கி பளபளப்பாக இருக்க, வெதுவெதுப்பான நீரில் கொஞ்சம் சாக்பீஸ் தூள் மற்றும் சலவை சோடா கலந்து ஸ்பாஞ்சை வைத்து துடைத்து, பிறகு நல்ல தண்ணீரில் மீண்டும் ஒரு முறை துடைக்க வேண்டும்.

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

திரு. **பா. பொன்னையா,** இ.ஆ.ப.,
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. **க. முத்து மீனாள்,**
கூடுதல் இயக்குநர்

திரு. **இரா. இரவிச்சந்திரன்,**
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்

## வருவாய் பெருக்கும் நடவடிக்கை திட்டத்தின் மூலம் தையல் தொழில்



செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் முகையூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் இணைந்துள்ள வானவில் சுய உதவிக் குழுவின் உறுப்பினரான திருமதி. சுகுணா அவர்கள் கூறுகையில், 'நான் முன்பு கார்மென்ட்ஸில் கூலி வேலைக்கு சென்று வந்தேன். எங்கள் குழு இணைந்துள்ள கூட்டமைப்பில் இருந்து தொழில் செய்வதற்கு கடன் தொகை வழங்குவதாக தெரிவித்தனர். அதனை தொடர்ந்து என்னுடைய பங்கு தொகை ரூ.2000/-ம் கூட்டமைப்பிலிருந்து கடன் தொகையாக ரூ.18000/-மும் பெற்று தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உதவியுடன் 15.09.2022 அன்று புதிய தையல் இயந்திரம் வாங்கி தையல் தொழிலை துவங்கினேன். தொழிலையும் நல்ல முறையில் இலாபகரமாக நடத்தி வருகிறேன். இந்த வருமானத்திலிருந்து நான் அசலும் வட்டியுமாக இதுவரை ரூ.10,000/-த்தை திரும்பச் செலுத்தி உள்ளேன். ஒவ்வொரு மாதமும் இலாபமாக ரூ.8000/- வரை பெறுகிறேன். இந்த வருமானத்தை கொண்டு என் குடும்பத்தை பொருளாதார நிலையில் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்கிறேன். இத்தொழில் மூலம் முன்பு இருந்ததை விட தற்போது எனது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. என்னுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

## வாழ்வாதார வளம் பெற்றுள்ள கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள்



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரம், நாட்டாணிபுரசக்குடி ஊராட்சி, கோபாலபட்டிணம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த பாரதி மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் இடியாப்பம் தயார் செய்து அருகில் உள்ள வீடுகள் விற்பனை செய்து வந்தனர். அவர்களை தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் மூலம் ஒருங்கிணைத்து 5 பேர் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழு அமைக்கப்பட்டது. இவர்களின் தொழில் திறனை ஆய்வு செய்த இந்தியன் வங்கி, மணல்மேல்குடி கிளை மேலாளர் ரூ.1,25,000/- கடனுதவி வழங்கினார்கள். தொழிலுக்காக கடனுதவி பெற்ற குழு உறுப்பினர்கள் தங்களின் தொழிலை விரிவுபடுத்தி அதிக அளவில் இடியாப்பங்களை தயாரித்து, பக்கத்து ஊராட்சிகளில் உள்ள பெரிய உணவகங்களில் மொத்தமாக விற்பனை செய்து வருகின்றனர். மேலும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கும் மொத்தமாக விநியோக ஆணை பெற்று விற்பனை செய்து வருகின்றனர். தற்போது உணவகங்கள், கிராமங்களில் உள்ள வீடுகள் மற்றும் சுப நிகழ்ச்சிகள் என தேவையின் அடிப்படையில் முழு நேரமாக இடியாப்பம் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். கூட்டுப் பொறுப்புக்குழு கடன் மூலம் பயனடைந்த பயனாளிகள் கூறுகையில் 'எங்களை ஒருங்கிணைத்து கடனுதவி பெற்று தந்து, எங்களின் வியாபாரத்தை விரிவுபடுத்த உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் மற்றும் நாட்டாணி புரசக்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறி மகிழ்கின்றனர்.

## வருமானம் ஈட்டும் தொழிலுக்கான கடன் மூலம் கீற்று முடைதல்

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்பட்டு வரும் கூனிமேடு கிராமத்தில் வசித்து வரும் திருமதி. தீபா, க/பெ. நரசிம்மன் பனித்துளி சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளமையால் வருவாய் ஈட்டும் தொழில் கடன் பெற்று கீற்று முடைதல் தொழில் நடத்தி வருகின்றார்.

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் சிறப்பு பயனாளிக்கு தொழில் மேம்பாட்டிற்காக பயனாளி விளிம்பு தொகை ரூ.2000/-மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடனாக ரூ.18,000/- என மொத்தம் ரூ.20,000/- கடன் வழங்குவதை அறிந்து கூட்டமைப்பை அணுகி கடனை பெற்றார். இத்தொகையை குறிப்பிட்ட மாதங்களில் 12 வட்டியுடன் திருப்பி செலுத்துமாறு கூட்டமைப்பு மூலம் தகவல் அளித்தனர்.

இக்கடன் தொகையை பெற்ற பயனாளி தனது தொழிலுக்கு தேவையான கீற்றுகளை கூனிமேடு கிராமத்தைச் சுற்றி உள்ள தென்னந்தோப்பில் மொத்தமாக வாங்கி, அதை முடைந்து கூனிமேடு, செய்யாங்குப்பம், அனுமந்தை மற்றும் மரக்காணம் கிராமத்தில் விற்பனை செய்து மாதம் ரூ.5000/-முதல் ரூ.6000/- வரை இலாபமாக சம்பாதித்து வருகிறார். இந்தத் தொகை இவரின் கடன் திருப்பம் மற்றும் குடும்ப செலவிற்கு உறுதுணையாய் இருந்தது. இதனால் குடும்பத்தில் தனக்கு நல்ல அங்கீகாரம் கிடைத்துள்ளதை எண்ணி மகிழ்ச்சி அடைந்ததீபா, தன் பெற்ற கடன் தொகையை முழுவதும் செலுத்தி முடித்தும் தன் தொழிலை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

இவருடைய முயற்சியை அப்பகுதி மக்களும் பனித்துளி மகளிர் குழுவும் மனதார பாராட்டினர். மேலும் வாழ்வாதாரத்தில் மேம்பாடு அடைய காரணமாக இருந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் ஆகியோருக்கு தீபா தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டார்.



Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,30,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

# வாழைக்கு நுண்ணூட்டம் தந்தோம்!
# வாழை நாரில் மதிப்புக் கூட்டி வளர்ந்தோம்!!




**ஸ்ரீரங்கம் வாழை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில், வாழை நுண்ணூட்டக்கலவை, இயற்கை உரங்கள் மற்றும் வாழை நார் கைவினைப் பொருட்கள் ஆகியவை விற்பனைக்கு உள்ளன.**

## விற்பனைப் பொருட்கள்:

1. பனானா சக்தி
2. மண்புழு உரம்
3. பஞ்சகவ்யம்
4. மீன் அமீனோ அமிலம்
5. பொன்னீம்
6. கன்சார்சியம்
7. வேப்பம் புண்ணாக்கு
8. புங்கம் புண்ணாக்கு
9. ஆமணக்கு புண்ணாக்கு
10. பாரம்பரிய அரிசி வகைகள்
11. வாழை நார் கைவினைப் பொருட்கள்







**நுண்ணூட்டக் கலவை 1 கிலோ ரூ.250**

## தொடர்புக்கு: 8680809984 / 9597476601

### தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை– 600032, தமிழ்நாடு

(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th February 2024 Posted at Patrika Channel, Egmore.




இயற்கை உணவு பொருட்கள்
தயாரிப்பு தொழில் மூலம் எங்களின்
மதிப்பும் மரியாதையும் கூடியுள்ளது

எதிர்கால வெற்றி
தருணத்திற்காக இன்றைய
நொடியையும் பயன்படுத்துங்கள்



